புதுக்கோட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

முன்னிலை – திரு.கூ.சண்முகம்,பி.எஸ்.ஸி.,எம்.ஏ.,எம்.எட்.,எம்.பில்.,

மூ.மு.எண்.11158/அ1/2024 நாள். .04.2025

பொருள் - பள்ளிக்கல்வி - தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு தொகுதி IV மூலம் இளநிலை உதவியாளராக நேரடி நியமனம் பெற்று – தற்போது திண்டுக்கல் மாவட்டம் – அகரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் – திரு.அ.ஜோசப் என்பாருக்கு – 29.09.2023 முற்பகல் முதல் – இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து திருத்திய ஆணையிடுதல் – சார்பு.

பார்வை – 1. அரசாணை நிலை எண்.151 பள்ளிக் கல்வி [எஸ்.இ1(1)] துறை நாள்: 09.09.2022

2. புதுக்கோட்டை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 06942/அ1/2023, நாள் 27.09.2023.

3. திண்டுக்கல் மாவட்டம், முதன்மைக் கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண்.6036/அ1/2024 நாள்.29.10.2024.

4. புதுக்கோட்டை முதன்மைக் கல்விஅலுவலரின் செயல்முறைகள் மூ.மு.எண்.9897/அ1/2024 நாள்: 22.11.2024.

-------

ஆணை-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி IV மூலம் (TNPSC Group IV) தெரிவு செய்யப்பட்டு பார்வை(2)ல் காணும் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக நேரடி நியமனம் செய்யப்பட்டு புதுக்கோட்டை வருவாய் மாவட்டம், புதுக்கோட்டை கல்வி மாவட்டம், இருந்திராப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணியேற்று, தற்போது திண்டுக்கல் மாவட்டம், அகரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பணிபுரிந்து வரும் திரு.அ.ஜோசப் என்பாருக்கு தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதியில் பார்வை (4)இல் காணும் செயல்முறைகளின் படி பணிவரன்முறை ஆணை வழங்கப்பட்டது. இவ்வலுவலக செயல்முறைகளின் படி பணிவரன்முறை ஆணை வழங்கப்பட்டது. ஆணையில் அரசு உயர்நிலைப் பள்ளி தாழனூர் என்பதற்கு பதிலாக அரசு உயர்நிலைப்பள்ளி இருந்திராப்பட்டி என திருத்தம் செய்து இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து திருத்திய ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | தேர்வாணையப் பட்டியலில் வரிசை எண் | பணியாளர் பெயர் / பதவி / பணிபுரியும் பள்ளி | இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை செய்த நாள் |
| --- | --- | --- | --- | --- |
| 01. | 654 | திரு.அ.ஜோசப்<br>இளநிலை உதவியாளர்<br>அரசு மேல்நிலைப்பள்ளி,<br>அகரம்,<br>திண்டுக்கல் மாவட்டம் | 29.09.2023<br>முற்பகல் | 29.09.2023<br>முற்பகல் |

மேற்கண்டுள்ள பணியாளர் இளநிலை உதவியாளர் பணியில் தொடர் மூன்றாண்டுகாலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தை நிறை செய்ய வேண்டும். இத்தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் துறைத் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

சார்ந்த பணியாளரின் திருத்திய பணிவரன்முறை சார்பான உரிய பதிவுகள் அன்னாரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

26/04/2025

முதன்மைக் கல்வி அலுவலர்
புதுக்கோட்டை

பெறுநர்-
சம்மந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக)

நகல் –

1. முதன்மைக் கல்வி அலுவலர்,
   முதன்மைக் கல்வி அலுவலகம்,
   திண்டுக்கல் மாவட்டம்.
2. தலைமையாசிரியர்,
   அரசு மேல்நிலைப்பள்ளி,
   அகரம், திண்டுக்கல் மாவட்டம்